**கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழிநுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞானங்களுக்கான நிறுவனம் (UCIARS)**
**வெலிகத்த, ஹம்பாந்தோட்டை**

# பணிப்பாளர் பதவி

கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழிநுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞானங்களுக்கான நிறுவனமானது பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்களை **2026 ஜூலை 28 ஆம் திகதி** வரை கோருகிறது.

விண்ணப்பதாரி இலங்கையின் குடிமக்களாக இருப்பதுடன் 63 வயதிற்கும் குறைந்தவராகவும் இருத்தல் வேண்டும். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரி நியமனத் திகதியில் இருந்து மூன்று ஆண்டுகளுக்கு அல்லது அவர் தனது 65 வயதைப் பூர்த்திசெய்யும் வரையில், எது முதலில் நிகழ்கிறதோ அதுவரை பதவியில் இருப்பர்.

UCIARS ஆனது 2008 ஆகஸ்ட் இல் வெலிகத்த ஹம்பாந்தோட்டையில் நிறுவப்பட்டது மற்றும் இது கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் கற்கை நெறிகளை (விவசாய தொழில்நுட்பத்தில் இளமானி பட்டம்) நடாத்தி வருவதுடன் விவசாய தொழில்நுட்பம், விவசாய வணிகங்கள், கிராமிய விஞ்ஞானங்கள் மற்றும் பிற தொடர்புடைய பகுதிகளில் அறிவுறுத்தல்கள், பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, ஆலோசனைகள் மற்றும் சமூக விரிவாக்க திட்டங்களை வழங்குகிறது.

பணிப்பாளர் நிறுவனத்தின் முதன்மை நிறைவேற்று அதிகாரியாகவும் அதன் முதன்மை கல்விசார் அலுவலராகவும் மற்றும் கணக்கு அலுவலராகவும் இருப்பார். அவர் நிறுவகத்தின் பொறுப்பு கூறும் அதிகாரியாகவும், நிறுவன முகாமைத்துவ சபை மற்றும் கல்வி சார் அவை உறுப்பினராகவும் தலைவராகவும் இருப்பார். அவர் பல்கலைக்கழக மூதவையின் அங்கத்தவராகவும் இருப்பார். நிறுவனத்திற்குள் ஒழுக்கத்தை பராமரிக்க பல்கலைக்கழக துணைவேந்தரின் வழிகாட்டுதலின் கீழ் பணிப்பாளர் பொறுப்பாக இருப்பார்.

பணிப்பாளர் தனது அறிவுசார் புலமை மற்றும் நிர்வாகத்திறன் மூலம் நிறுவனத்தின் இலக்குகளை அடையக்கூடிய ஒரு நோக்கினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி உயர் கல்வி புலமைசார் திறன்கள் மற்றும் நேர்மைத்திறன் உடையவராகவும் சிறந்த ஆராய்ச்சி வெளியீட்டு தோற்றப்பாட்டு பதிவுகள், நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ பண்புகளுடன் உயர்தர ஒருவருக்கொருவர் இடையிலான திறன்கள், மற்றும் கொள்கை ரீதியிலான பிரச்சினைகள் பற்றிய தெளிவான புரிதலைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

வெற்றிகரமான விண்ணப்பதாரர் UCIARS வெலிகத்த ஹம்பாந்தோட்டை இல் முழுநேர அடிப்படையில் இருக்க வேண்டும்.

பணிப்பாளர், பேராசிரியருக்கான சம்பள அளவினை பெறுவதுடன் பதவிக்கு பொருந்தும் இதர கொடுப்பனவுகளும் உள்ளடக்கப்படும்.

விண்ணப்பிப்பதற்கு ஆர்வமுள்ள விண்ணப்பதாரி பின்வரும் ஆவணங்களை விண்ணப்பங்களுடன் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.

i. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் [UCIARS இணையதளத்தில் (www.uciars.cmb.ac.lk) பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்].
ii. பிறந்த திகதி உட்பட விண்ணப்பதாரியின் பூரணமான சுயவிபரக் கோவை (பிறப்புச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட நகல் இணைக்கப்பட வேண்டும்).
iii. நிறுவனத்தின் மேம்பாட்டுக்கான நோக்கு பற்றிய கூற்று.
iv. பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டால், அவர் எதனை அடைவதற்கு முன்மொழிகிறார் என்பது பற்றிய ஒரு சுருக்கமான விபரம்.
v. கல்வி மற்றும் ஆராய்ச்சி சிறப்பம்சங்கள், தொழில்முறைத் தொடர்பாடல்கள், மற்றும் நிர்வாக திறன்கள், வினைத்திறனான தலைமைத்துவம் போன்றவற்றுக்கான ஆதாரங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்கள்.
vi. விண்ணப்பதாரி தற்போதைய பணிப்பாளராக இருந்தாலோ அல்லது இதற்கு முன்னர் நிறுவனத்தின் பணிப்பாளர் பதவியை வகித்திருந்தாலோ, அவர் தனது முதல் பதவிக்காலத்தில் ஆற்றிய சாதனைகளை எடுத்துரைக்கும் ஓர் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். அந்த அறிக்கையின் மென்பிரதியை PDF வடிவத்தில், விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ள துணைப் பதிவாளரின் மின்னஞ்சல் முகவரிக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.
vii. பொதுத் துறை நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், சட்டரீதியான அமைப்புக்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பணியாற்றுபவராயின், பதவிக்கு நியமிக்கப்பட்டால் விண்ணப்பதாரர் குறித்த நிறுவனத்தில் இருந்து விடுவிக்கப்படலாம் என்பதை குறிக்கும் நிறுவனத் தலைவரின் ஒப்புதலுடன் அந் நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்கள் அனுப்பபடல் வேண்டும்.

ஜனவரி 01, 2024 தேதியிட்ட ப.மா.ஆ சுற்றறிக்கை எண் 01/2024-இல் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி தேர்வு செயல்முறை மேற்கொள்ளப்படும் (இந்த சுற்றறிக்கையை www.ugc.ac.lk என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்).

விண்ணப்பங்கள் கடித உறை ஒன்றினுள் இடப்பட்டு முத்திரையிடப்பட்டு துணைப் பதிவாளர், கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழிநுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞானங்களுக்கான நிறுவனம், வெலிகத்த, ஹம்பாந்தோட்டை அவர்களுக்கு முகவரியிடப்பட்டு **2026 ஜூலை 28 ஆம் திகதி** அல்லது அதற்கு முன்னதாக அவர்களது அலுவலகத்தில் கிடைக்கப்பெறுமாறு அல்லது பதிவு தபாலில் அனுப்பி வைக்கப்பதுவதுடன் அதன் பிரதியினை **dr@uciars.cmb.ac.lk** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும் வேண்டும். விண்ணப்பத்தினை கொண்டிருக்கும் கடித்த உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டிருக்க வேண்டும்.

முடிவுத் திகதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அத்துடன் முழுமை பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**நிறுவன முகாமைத்துவ சபையின் செயலாளர்**
**கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழிநுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞானங்களுக்கான நிறுவனம்**
**வெலிகத்த, ஹம்பாந்தோட்டை**
**28.06.2026**